 0274

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021(2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021(2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021(2022)

| | | | |
|---|---|---|---|
| බෞද්ධ ශිෂ්ටාචාරය I<br>பௌத்த நாகரிகம் I<br>Buddhist Civilization I | 45 T I | | පැය දෙකයි<br>இரண்டு மணித்தியாலம்<br>*Two hours* |

**அறிவுறுத்தல்கள் :**

- ※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- ※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** 'ஆச்சிரம தர்மம்' பற்றிய பிராமணிய போதனைகளுக்கு அமைய பிரமச்சாரி ஆச்சிரம காலத்தில் பல்வேறு நுட்பங்களையும் கலைகளையும் கற்க வேண்டியவர்கள்
(1) பிராமணர்கள் மட்டும்.
(2) க்ஷத்திரியர்கள் மட்டும்.
(3) பிராமணர்களும் க்ஷத்திரியர்களும் மட்டும்.
(4) பிராமணர்களும் வைசியர்களும் மட்டும்.
(5) பிராமணர்களும் க்ஷத்திரியர்களும் வைசியர்களும் மட்டும்.

**2.** பிராமணீய ஆபத்தர்மத்துடன் தொடர்பான கூற்றுகள் சில கீழே தரப்பட்டுள்ளன.
A - பிராமணர்கள் க்ஷத்திரியர்களின் கடமைகளைச் செய்ய முடியும்.
B - பிராமணர்கள் வைசியர்களின் கடமைகளைச் செய்ய முடியும்.
C - க்ஷத்திரியர்கள் வைசியர்களின் கடமைகளைச் செய்ய முடியும்.
D - வைசியர்கள் க்ஷத்திரியர்களின் கடமைகளைச் செய்ய முடியும்.
E - சூத்திரர்கள் வைசியர்களின் கடமைகளைச் செய்ய முடியும்.
இவற்றுள் **தவறான** இரண்டு கூற்றுகளாவன
(1) A உம் B உம் (2) B உம் C உம் (3) B உம் E உம்
(4) C உம் D உம் (5) D உம் E உம்

**3.** உயிரினங்களின் தூய்மையின்மைக்கு அல்லது தூய்மைக்கு காரணகாரியத் தொடர்பில்லை என்று கற்பித்த புத்தர் காலத்தில் வாழ்ந்த ஆசிரியர் யார்?
(1) அஜித கேசகம்பலி (2) மக்கலி கோசல (3) பூரண கஸ்ஸப்ப
(4) பகுட கச்சாயன (5) சஞ்சய பெல்லத்திபுத்த

**4.** இந்தியாவில் புத்தர் கால சிரமண சமூகம் தொடர்பான **தவறான** கூற்றைத் தெரிவு செய்க.
(1) ஞான மார்க்கத்தை ஏற்றுக்கொள்ளல்
(2) கர்ம மார்க்கத்தை நிராகரித்தல்
(3) சிந்தனைச் சுதந்திரத்தை மதித்தல்
(4) இல்லற வாழ்க்கையை (அகாரிக பிரதிபதா) ஏற்றுக்கொள்ளல்
(5) மிதமிஞ்சிய துறவி நடத்தையை ஏற்றுக்கொள்ளல்

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

**5.** கி.மு. ஆறாம் நூற்றாண்டில் பாரதத்தில் நகரங்களின் நிர்மாணிப்பிலும் நகரமயமாதலிலும் செல்வாக்குச் செலுத்திய மிக முக்கிய காரணியாகக் குறிப்பிடத்தக்கது
(1) வர்த்தகர்களின் வகுப்பு ஒன்று உருவாதல்
(2) போர் முரண்பாடுகள் அதிகரித்தல்
(3) விவசாய உற்பத்திகள் அதிகரித்தல்
(4) சனத்தொகை அதிகரித்தல்
(5) மக்கள் ஆடம்பர வாழ்க்கையை விரும்பும் போக்கு

**6.** மஹா கச்சாயன அரகதர் உபதேசித்த போதனையைக் கேட்டு மும்மணிகளிடத்தில் சரண் புகுந்த சண்டபஜ்ஜோத மன்னன் புத்தர் காலத்தில் ............................................ இராச்சியத்தின் ஆட்சியாளனானான்.
(1) வத்ஸ (2) காசி (3) அவந்தி (4) மத்சய (5) குரு

**7.** புத்தர் பெருமானின் ஒன்பது குணங்களில் 'விஜ்ஜாசரண சம்பன்ன' என்பதனால் குறிப்பிடப்படுவது
(1) திரிவித்யா ஞானமும் பதினைந்து சரணதர்மமும் கொண்டவராய் இருத்தல்
(2) சதுர் வைசாரத்ய ஞானமும் பதினைந்து சரணதர்மமும் கொண்டவராய் இருத்தல்
(3) பஞ்ச அபிக்ஞாவும் பதினைந்து சரண தர்மமும் கொண்டவராய் இருத்தல்
(4) ஷட்அபிக்ஞாவும் பதினைந்து சரண தர்மமும் கொண்டவராய் இருத்தல்
(5) அஷ்ட வித்தியாவும் பதினைந்து சரண தர்மமும் கொண்டவராய் இருத்தல்

**8.** 'புத்த பெருமானின் வாழ்க்கை தாமரையை' (பத்மாகார ஜீவிதய) விளக்கும் கூற்றாவது
(1) மஹா கருணையுடன் உலகைப் பார்த்தமை
(2) இழிகுணத்தால் மாசடைந்த தூய்மையற்றவர்களிடையே தூய்மையான மாசில்லாத வாழ்க்கையைக் கொண்டு நடத்தியமை
(3) நான்கு குலங்களுக்கும் உரிய சீடர்களை பிக்குமார் சமூகத்தில் நுழைய அனுமதித்தமை
(4) இடையிடையே வேறு சமய மடாலயங்களுக்குச் சென்று தர்மத்தைப் போதித்தமை
(5) வேறு சமயத்தவர்கள் தத்துவவியலாளர்களுடன் சினேகபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டமை

**9.** பேதுயென் தஹம் - கந்த
பஜனய கெலென் குணகந்த
பக தஹமின் சசந்த
..............................
மேற்குறிப்பிட்ட வரிகளினால் விவரிக்கப்படும் புத்தரின் பண்பு யாது?
(1) சுகத (2) லோகவிது (3) அரஹங் (4) புத்த (5) பகவா

**10.** பல்வேறு சமயக் கருத்துகளைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றிய இந்திய மக்களின் ஆத்ம சக்தியையும் சுயாதீனத்தையும் உறுதிப்படுத்துவதில் வெற்றி கண்ட பௌத்த போதனை
(1) 'தாம் செய்த எல்லாக் கர்மங்களுக்குமான விளைவுகளை தாமே அனுபவிக்க வேண்டும்.'
(2) 'விடுதலை பெறுதல் அல்லது பெறாதிருத்தல் என்பது ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட பொறுப்பாகும்.'
(3) 'நிர்வாணமடைய அரிஅட்டங்கிமக இனைத் தவிர வேறு வழி இல்லை.'
(4) 'விருத்தியாக்கக்கூடிய மனம் உடைய ஒரேயொரு உயிரினம் மனிதன் மட்டுமே.'
(5) 'புத்தர்களின் பிறப்பு உலகுக்கு நன்மையையும் மகிழ்ச்சியையும் கொண்டு வந்தது.'

**11.** புத்தரின் பிரதான உதவியாளரான வண. ஆனந்தருக்கு **ஒப்படைக்கப்படாத** பொறுப்பு
(1) வண. ஆனந்தரினால் விடுக்கப்படும் அழைப்பினை புத்தர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.
(2) ஜேதவனராமயவுக்கு வரும் பிக்குமார்களின் தேவைகள் நான்கினையும் வழங்க ஒழுங்குபடுத்தல்
(3) வெளியிலிருந்து வரும் எவரையும் விரும்பிய எந்த நேரத்திலும் புத்தரைச் சந்திக்கச் செய்வதற்குரிய அனுமதியைக் கொண்டிருந்தமை
(4) ஏதேனும் சந்தேகம் ஏற்பட்ட உடனேயே அதுபற்றி புத்தரிடம் விசாரித்தறிவதற்கான அனுமதி இருந்தமை
(5) தான் இல்லாத சந்தர்ப்பத்திலும் புத்தர் போதித்த தர்மத்தை மீண்டும் ஒரு தடவை போதிக்கச் செய்து செவிமடுத்து நினைவில் வைத்துக்கொள்ளல்

[பக். 3 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka ,

0274

**12.** மஹா பிரஜாபதி கோதமி பற்றிய **தவறான** கூற்று எது?
(1) சிரராத்திரக்ஜ பிக்குணிமாரிடையே தலைமை வகித்தமை
(2) விசாலா நகரத்தில் குடாகாரசாலாவில் துறவற உபசம்பதா பெற்றமை
(3) கபில வஸ்துவில் நிக்குரோதாராமயவை தாபிப்பதற்கு முக்கிய பங்களிப்புச் செய்தமை
(4) கௌதம புத்த சாசனத்தின் முதலாவது பிக்குணியாக இருந்தமை
(5) விசாலா நகரில் பிக்குணி ஆராமயவில் அற்புதங்கள் செய்த பின்னர் மரணமடைந்தமை

**13.** தனிநபர் சக்தியை உறுதிப்படுத்த தர்மத்தில் **பயன்படுத்தப்படாத** பதம் எது?
(1) விக்ஞாண தாது (2) ஆரம்ப தாது (3) நிக்கம தாது
(4) பரக்கம தாது (5) உபக்கம தாது

**14.** அரசாட்சி பற்றிய பௌத்த போதனைகள் தொடர்பான கூற்றுகள் சில கீழே தரப்பட்டுள்ளன.
A - அரசன் மக்களின் சம்மதத்துடன் தெரிவுசெய்யப்படுவதால் 'மஹா சம்மத' எனப்படுவான்.
B - அரசன் வயல்களுக்கான அதிபதி என்பதால் 'கத்திய' எனப்படுவான்.
C - அரசன் நேர்மையான குணத்தினால் மக்களை மகிழ்விப்பவன் என்பதால் 'ராஜா' எனப்படுவான்.
D - குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவதே ஆட்சியாளரின் பிரதான பொறுப்பு ஆகும்.
E - அரசுக்கு வரி செலுத்துதல் மக்களின் கடமை ஆகும்.
தீக நிகாயாவில் அக்கஞ்ஞ சூத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசின் தோற்றம் பற்றிய விவரிப்புக்கு ஏற்ப மேலே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் சரியானது / சரியானவை
(1) A மாத்திரம் (2) A, B ஆகியன மாத்திரம்
(3) A, B, C ஆகியன மாத்திரம் (4) A, B, C, D ஆகியன மாத்திரம்
(5) A, B, C, D, E ஆகிய எல்லாம்

**15.** பின்வருவனவற்றுள் சப்த அபரிஹானீய தர்மங்களுக்கு **உரித்தல்லாத** இரண்டு கூற்றுகளைத் தெரிவுசெய்க.
A - ஏழைகளுக்கு செல்வத்தைச் சம்பாதிப்பதற்கான சந்தர்ப்பங்கள் அதிகரிக்கப்பட வேண்டும்.
B - நாட்டில் குற்றங்களைத் தடுப்பதன் மூலம் நீதியும் சமாதானமும் தாபிக்கப்பட வேண்டும்.
C - திருமணமான மற்றும் திருமணமாகாத பெண்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.
D - முதியோர்களுக்கு மரியாதை செலுத்தி அவர்களின் ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் பெறுதல் வேண்டும்.
E - நாட்டின் புராதனமான முக்கியமான புனித இடங்கள் பாதுகாக்கப்பட்டு பேணப்படுதல் வேண்டும்.
(1) A உம் B உம் (2) A உம் C உம் (3) A உம் D உம்
(4) A உம் E உம் (5) B உம் C உம்

**16.** பௌத்த சமயத்தில் கற்பிக்கப்படும் 'சிரத்தா' பற்றிய **பொருத்தமற்ற** கருத்து அடங்கிய தெரிவு எது?
(1) அமூலிகா சிரத்தா, அகாரவதி சிரத்தா என சிரத்தா இரண்டு விதமானவையாகும்.
(2) அமூலிகா சிரத்தா நம்பிக்கை, பக்தி, வழிபாடு ஆகிய மனதின் பண்புகளுக்குச் சமமானது.
(3) மும்மணிகளின் பண்பு பற்றிய விழிப்புணர்வு, புரிந்துணர்வு மூலமான நம்பிக்கை ஆகாரவதி சிரத்தா எனப்படும்.
(4) ஆகாரவதி சிரத்தாவையும் அமூலிகா சிரத்தாவையும் பௌத்த சமயம் மதிக்கிறது.
(5) சிரத்தாவ என்பது பௌத்த வழியினைப் பின்பற்றவும் பிரக்ஞ்ஞர் அடைவதற்கும் வழிகாட்டும் மனதின் பண்புகளில் ஒன்று ஆகும்.

**17.** பத்து அகுசல்களில் குறிப்பிடப்படும் சரீரம், வாய்மொழி ஆகியன மூலமான அகுசலம் ஒவ்வொன்றைக் கொண்ட தெரிவு எது?
(1) கொலை செய்தலும் களவெடுத்தலும்
(2) பாலியல் துர்நடத்தையும் பொய்மையும்
(3) கோள் சொல்லலும் கடுமையான வார்த்தை பேசுதலும்
(4) அரட்டை அடித்தலும் பேராசையும்
(5) கெட்ட எண்ணமும் தவறான கருத்தும்

[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka ,
Department of Examinations Sri Lanka ,

**18.** பின்வருவன பௌத்த போதனைகளில் காணப்படும் புகழ்பெற்ற சில கூற்றுகள் ஆகும்.

A - ராக-த்வேச-மோக என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட செயல்கள் பாவச் செயல்கள் என காலாம சூத்திரம் விளக்குகிறது.

B - அத்தூபனாயிக தர்மவிற்கு அமைய நல்லது கெட்டதைத் தீர்மானிக்க முடியும்.

C - கண்ணாடியில் ஒருவர் தனது சரீரத்தைத் தானே அவதானிப்பது போல ஒருவரது சரீர, வாய்மொழி, மனதின் செயற்பாடுகள் கூர்ந்து அவதானிக்கப்பட வேண்டும்.

D - ஏதேனுமொரு செயலைச் செய்து மனவேதனையையும் துன்பம் தரும் விளைவுகளையும் ஏற்படுத்தி கண்களில் கண்ணீரை வரவழைக்கும் பாவச் செயல்களை செய்யக்கூடாது.

E - நல்ல உடனலமே உயர்ந்த இலாபம், சந்தோஷமே உயர்ந்த பொக்கிஷம், நம்பிக்கையே உயர்ந்த உறவினரும் ஆகும்.

மேலே தரப்பட்டுள்ள கூற்றுகளில் நல்லது கெட்டது என்பதைத் தீர்மானிக்கப் பயன்படுத்தக்கூடிய பிரமாணங்களாகக் கருதக்கூடியவை

(1) A, B ஆகியன மாத்திரம் (2) A, C ஆகியன மாத்திரம் (3) A, D ஆகியன மாத்திரம்
(4) A, B, C, D ஆகியன மாத்திரம் (5) A, B, C, D, E ஆகிய எல்லாம்

**19.** பஞ்சீல பிரதிபதாவுக்கு ஏற்ப மனிதன் வாழ்வதற்கான உரிமை, நேர்மையாகச் சம்பாதித்த செல்வத்தை தம்வசம் வைத்திருக்கும் உரிமை என்பவற்றை உறுதிப்படுத்தும் இரண்டு அறிவுரைகள்

(1) உயிர்க் கொலையிலிருந்தும் களவெடுத்தலிலிருந்தும் விலகியிருத்தல்
(2) உயிர்க் கொலையிலிருந்தும் பாலியல் துர்நடத்தையிலிருந்தும் விலகியிருத்தல்
(3) உயிர்க் கொலையிலிருந்தும் பொய்மையிலிருந்தும் விலகியிருத்தல்
(4) உயிர்க் கொலையிலிருந்தும் போதைவஸ்துகளிலிருந்தும் விலகியிருத்தல்
(5) களவெடுத்தலிலிருந்தும் பாலியல் துர்நடத்தையிலிருந்தும் விலகியிருத்தல்

**20.** பௌத்த சமயம் அழகியல் கலைகளை நயப்பதை கண்டனம் செய்யவில்லை. பௌத்த மூலங்களில் புத்த பெருமான் போலவே அவரின் சாந்தமான சீடர்களும் பற்றில்லாது கலைகளை நயந்ததற்கான சான்றுகளைக் காணக்கூடியதாயுள்ளது. பௌத்த பகுப்பாய்வுக்கு அமைய கலைகளை நயத்தலுக்கான அடிப்படையாக இனங்காணக்கூடியது

(1) சுகாஸ்வாதம் (2) பிரசாதவும் நிர்வேதவும்
(3) சிரத்தாவின் தோற்றம் (4) திரிலக்ஷணவை நினைவுபடுத்தல்
(5) கர்மவிளைவில் நம்பிக்கை

**21.** உழைப்புக்கும் செல்வத்துக்கும் இடையிலான தொடர்பை மிகத் தெளிவாக வலியுறுத்தும் சூத்திரம்

(1) சிகாலோவாத சூத்திரம் (2) பத்தகம்ம சூத்திரம் (3) அனண சூத்திரம்
(4) இண சூத்திரம் (5) மங்கல சூத்திரம்

**22.** பின்வரும் பந்தியை வாசித்து இடைவெளிக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

ஒரு புற்றினைக் கறையான் கட்டுவது போல வியாபாரியான ரத்னசீலன் பௌத்த பொருளாதாரக் கோட்பாடுகளைப் பின்பற்றி படிப்படியாக தனது பொருளாதாரத்தை வளமானதாக்கி தனது செல்வத்தைக் கண்டு மகிழ்ச்சியடைந்தது தனி பெருமளவு செல்வத்தைத் தான் பெற்றிருந்த காரணத்தினால் மட்டுமன்று.

கடன்பட்டு தனது வியாபாரத்தை முன்னேற்றுவதற்கு தீர்மானம் எடுக்காத இவர் உரிய நிதி முகாமைத்துவத்தில் நம்பிக்கை வைத்து இலாபம் பெறுவதை மட்டுமே நோக்கமாகக் கருதாது நேர்மையுடன் பண்புத்தரமான சேவையைத் தனது நுகர்வோருக்கு வழங்க எப்போதும் முயற்சி செய்தார். இந்தப் பண்பு இவரின் வியாபாரம் நாளுக்குநாள் முன்னேற பங்களிப்புச் செய்ததுடன் எப்போதும் அவர் ஒரு பௌத்தனாக பாவச் செயல்களிலிருந்து விலகி செயற்பட்டதால் அத்தகைய வாழ்க்கையினால் அவர் எப்போதும் மன அமைதியும் மகிழ்ச்சியும் கொண்டிருந்தார்.

அவர் வியாபாரத்தினால் பெறும் இலாபத்தை முதலீட்டிற்கும் நுகர்விற்கும் சரியான முறையில் பயன்படுத்தி அஜத்துமாறிக, உதும்பரகாதிக்க என்னும் பிழையான நுகர்விலிருந்து விலகி மகிழ்ச்சியுடன் தனது வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டார். மேலே தரப்பட்டுள்ள விவரிப்புக்கு ஏற்ப வியாபாரி ரத்னசீலன் ............. சிறப்பாக அனுபவித்தார்.

(1) அத்தி சுகம்
(2) அத்தி சுகமும் போக சுகமும்
(3) அத்தி சுகமும் அனண சுகமும்
(4) அத்தி சுகம், போக சுகம், அனண சுகம்
(5) அத்தி சுகம், போக சுகம், அனண சுகம், அனவஜ்ஜ சுகம்

[பக். 5 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

**23.** சூத்திர பிடகவிலுள்ள பஞ்சபலி எண்ணக்கருவினால் .............. கோட்பாடு முன்வைக்கப்பட்டுள்ளது.
(1) செல்வத்தைச் சம்பாதித்தல்
(2) செல்வத்தைப் பாதுகாத்தல்
(3) செல்வத்தை முகாமைத்துவம் செய்தல்
(4) செல்வத்தை நுகர்தல்
(5) செல்வத்தை முதலீடு செய்தல்

**24.** சிகாலோவத சூத்திரத்துக்கு ஏற்ப வடக்கு, தெற்கு திசைகளின் மூலம் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவோர்
(1) பெற்றோர், ஆசிரியர்கள்
(2) மேலான துறவிகள், ஆசிரியர்கள்
(3) நண்பர்கள், ஆசிரியர்கள்
(4) மேலான துறவிகள், பெற்றோர்
(5) நண்பர்கள், பெற்றோர்

**25.** முப்பத்தெட்டு மங்களகரமான விடயங்களில் 'சன்துட்டி' என்பதால் கருதப்படுவது
(1) பெற்றுக்கொண்டவற்றால் பெறும் மகிழ்ச்சி
(2) சரியான வாழ்க்கை நடத்துவதனால் பெறும் மகிழ்ச்சி
(3) கடமைகளை நிறைவேற்றுவதால் பெறும் மகிழ்ச்சி
(4) தானம் கொடுப்பதால் பெறும் மகிழ்ச்சி
(5) சத்தியத்தை உணர்ந்து கொள்வதால் பெறும் மகிழ்ச்சி

**26.** 'கறன கலட்ட பவ் மிஹிறிய மீசே' என்ற கருத்தைப் பிரதிபலிக்கும் தம்மபத காதா வரிகளைத் தெரிவு செய்க.
(1) 'யோ பாலோ மக்ஞுதி பாலயம்'
(2) 'சக்கங்ஞ்வ வஹதொ பதங்'
(3) 'மதுவா மக்ஞுதி பாலோ'
(4) 'அத்தனாவ கதங் பாபங்'
(5) 'தண்ஹாய ஜாயதி சொகொ'

**27.** புத்தர் பெருமான் தனது சீடர்களின் திறமை, ஆற்றல் என்பவற்றை கவனத்தில் கொண்டு பதவிகளை வழங்கினர் என அங்குத்தர நிகாயவின் ஏத்ததக்க பாளியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு உயர் பதவிகளை வகித்த சில சீடர்களின் பெயர்களும் அவர்களின் பதவிகளும் கீழே தரப்பட்டுள்ளன. இவற்றுள் இரண்டு சீடர்களின் பெயர்கள் மட்டுமே சரியானவையாகும்.
A - புண்ண மந்தானிபுத்த மகா தேரர் - தெய்வீக சக்தியுள்ளவர்களின் தலைவர்
B - மஹாகாசியப்ப தேரர் - துதங்க பயிற்சி செய்வோரின் தலைவர்
C - சாரிபுத்த மகா தேரர் - மனோதத்துவ சக்தியுள்ளவர்களின் தலைவர்
D - மொக்கலான மகா தேரர் - ஞானமுள்ளோரின் தலைவர்
E - உபாலி மகா தேரர் - ஒழுக்கமுள்ளவர்களின் தலைவர்
பெயரும் பதவியும் சரியாக பொருந்தும் தெரிவு
(1) A, B ஆகியன மாத்திரம்
(2) A, C ஆகியன மாத்திரம்
(3) A, D ஆகியன மாத்திரம்
(4) A, E ஆகியன மாத்திரம்
(5) B, E ஆகியன மாத்திரம்

**28.** புத்தர் பெருமானால் தனது சீடர்களை வழிப்படுத்துவதற்கு அறிமுகஞ் செய்யப்பட்ட பல்வேறு தண்டனை முறைகளில் 'பிரம்ம தண்டனை' எனப்படுவது
(1) ஏதாவதொரு எல்லையைக் குறிப்பிட்டு அதனைத் தாண்டிச் செல்வது தடை செய்யப்படுதல்
(2) இல்லறத்தாரிடம் மன்னிப்பைப் பெறுவதற்குக் கட்டளையிடுதல்
(3) பௌத்த சங்கத்திலிருந்து வெளியேற்றுதல்
(4) தண்டனை பெற்றவருடன் எவரும் பேசாது தனிமைப்படுத்தப்படல்
(5) தகுதிகாண் காலமொன்றைத் தீர்மானித்து வேறொரு தலைமைப் பிக்குவின் கீழ் பயிற்சி பெறவிடுதல்

**29.** முதலாம் பௌத்த பேரவையின் பின்னர் தர்மத்தையும் வினயத்தையும் தூய்மையாகவும் வாய்மொழி மரபாகவும் கொண்டு செல்வதற்கு மூத்த பிக்குமார்களுக்கும் அவர்களின் சிஷ்யர்களுக்கும் அவர்களின் பரம்பரைகளுக்கும் ஒப்படைக்கப்பட்டது. அவ்வாறு ஒப்படைக்கப்பட்டதைச் சரியாகக் குறிப்பிடும் விடை எது?
(1) தீகநிகாய - அனருத்த மகா தேரர்
(2) மஜ்ஜிம நிகாய - ஆனந்த மகா தேரர்
(3) சம்யுக்த நிகாய - மஹா காசியப்ப மகா தேரர்
(4) அங்குத்தர நிகாய - மஹா கச்சாயன மகா தேரர்
(5) குத்தக நிகாய - சீவலி மகா தேரர்

[பக். 6 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka ,
Department of Examinations Sri Lanka ,

**30.** யச பிக்கு விசால நகருக்கு வரும்போது வஜ்ஜிபுத்தக பிக்குகள் பணம் யாசகம் செய்வதில் ஈடுபடுவதைக் கண்டு எதிர்ப்புத் தெரிவித்தமையால் அவருக்குத் தண்டனை விதிக்க வஜ்ஜிபுத்தக பிக்குகள் முயற்சி செய்தனர். அவர்கள் விதிக்க முற்பட்ட தண்டனை வினயகர்மங்கள் இரண்டுமாவன
(1) பட்டிசாரணீய கர்மய, பப்பாஜனிய கர்மய
(2) பட்டி சாரணீய கர்மய, உக்கேபனிய கர்மய
(3) உக்கேபனிய கர்மய, பப்பாஜனிய கர்மய
(4) உக்கேபனிய கர்மய, தஜ்ஜனீய கர்மய
(5) தஜ்ஜனிய கர்மய, பப்பாஜனிய கர்மய

**31.** வஜ்ஜிபுத்தக பிக்குகள் அர்ப்பணிப்பதாக ஏற்றுக்கொண்டு முன்வைத்த தசவஸ்துவில் குறிப்பிடப்படும் 'அமதித்த கப்ப' என்பதன் கருத்து
(1) ஒரு தடவை உணவு உண்டு முடித்த பின்னர் வேறொரு கிராமத்துக்குச் சென்று மீண்டும் உண்ணுதல் ஏற்புடையது
(2) கொம்பு ஒன்றில் உப்பை வைத்துக்கொண்டு உப்பில்லாத உணவொன்று கிடைத்தால் அதைக் கலந்து உண்ணுதல் ஏற்புடையது
(3) புளித்த அல்லது புளிக்காத கள்ளினை அருந்துதல் ஏற்புடையது
(4) உபோசதா வீட்டில் இருக்கும் பிக்குவிடம் விருப்பினைப் பெறாது உபோசம்த கம்மாவை வேறு வேறாக நடத்திய பின்னர் அவரிடம் விருப்பினைப் பெறுதல் ஏற்புடையது
(5) பாலோ தயிரோ அல்லாத திரிவுபட்ட பாலை அகால வேளையில் உண்ணுதல் ஏற்புடையது

**32.** இரண்டாவது பௌத்த பேரவையின் விளைவு **அல்லாதது**
(1) தம்ம - வினய என்பவற்றைப் பாதுகாப்பாகப் பேணுவதற்காக பிக்குமார் பரம்பரைகளிடம் ஒப்படைத்தல்
(2) ஸ்தவிரவாத, மகாசங்கிக என பிக்குமார் இரு பிரிவாகப் பிரிதல்
(3) ஸ்தவிரவாத நிகாய 12 ஆக பிரிக்கப்படுவதற்கான ஆரம்பம்
(4) மகாயானவின் தோற்றத்துக்கான ஆரம்ப முயற்சி
(5) அலஜ்ஜி பாபி பிக்குகள் எனப் பெயரிட்டு பத்தாயிரம் வஜ்ஜி பிக்குகளை தேரவாத மரபிலிருந்து வெளியேற்றியமை

**33.** மூன்றாவது பௌத்த பேரவையினால் தூய்மையாக்கப்பட்ட தர்ம-வினய என்பவற்றைப் பரப்புவதற்கு பிக்குமார்கள் அண்மையிலுள்ள நாடுகளுக்கு அனுப்பப்பட்டதாக வரலாற்றுக் குறிப்பேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றுக்கேற்ப மஹிஸ மண்டலவுக்குச் சென்ற சமயப்பணிக்கான பிக்கு
(1) வண. மஜ்ஜின்திக்க தேரர்
(2) வண. மஹா தம்மரக்கித தேரர்
(3) வண. மஜ்ஜிம தேரர்
(4) வண. மகாதேவ தேரர்
(5) வண. மகாரக்கித தேரர்

**34.** தேரவாத பௌத்த பேரவையின் விளைவுகள் சில கீழே தரப்பட்டுள்ளன.
A - புத்தர் போதனைகளை வாய்மொழி மூலம் (பாணக) பரம்பரைகளுக்கு ஒப்படைத்தல்
B - தஸவஸ்து வினயவுக்கு எதிரானது எனத் தீர்மானித்தல்
C - திரிபிடகத்தை சூத்ர-வினய-அபிதர்ம என்று பூரணமாக்குதல்
D - ஒன்பது நாடுகளில் பௌத்தத்தைத் தாபித்தல்
E - சிறிய, மிகச் சிறிய போதனை விதிகளை மாற்றம் செய்யாதிருக்கத் தீர்மானித்தல்
மேலே தரப்பட்டுள்ள விடயங்களில் முதலாவது பௌத்த பேரவையின் விளைவுகள் மட்டும் அடங்கிய விடை
(1) A உம் B உம்
(2) A உம் C உம்
(3) A உம் D உம்
(4) A உம் E உம்
(5) B உம் C உம்

**35.** இந்தியாவின் பௌத்த பல்கலைக்கழகங்களில் முக்கிய பல்கலைக்கழகமாகக் கருதப்படும் நாலந்தா பல்கலைக்கழகத்துக்குத் தேவையான கட்டடங்கள் பலவற்றை அமைத்து தனித்துவமான நிலையமாக கி.பி. 415 இலிருந்து 455 வரை ஆட்சி செய்த .................................. அரசனால் பெயரிடப்பட்டது.
(1) சக்ராதித்ய
(2) பாலாதித்ய
(3) விக்கிரமாதித்ய
(4) புத்த குப்த
(5) ததாகத குப்த

[பக். 7 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

**36.** பௌத்தத்துக்கு முன்னரான இலங்கையில் நிலவிய வழிபாடு, நம்பிக்கை, மத அனுஷ்டானங்கள் என்பன கீழே தரப்பட்டுள்ளன. இவற்றுள் இலங்கைக்குரிய மூலம் **அல்லாத** வழிபாடு எது?
(1) மரங்களை வழிபடுதல்
(2) சிவனை வழிபடுதல்
(3) நாகங்களை வழிபடுதல்
(4) பேய்களை வழிபடுதல்
(5) கோள்களையும் நட்சத்திரங்களையும் வழிபடுதல்

**37.** இலங்கையில் பௌத்த சமயம் அறிமுகம் செய்யப்பட்ட பின்னர் மகிந்த தேரர் முதல் மழைக்கால (வஸ்ஸ வாச) வாசம் செய்த இடமாகக் கருதப்படுவது
(1) மிகிந்தலை
(2) தேவநம்பிய தீசனின் அரண்மனை
(3) காலபிரசாத
(4) இசுருமுனிய
(5) வெஸ்ஸகிரி

**38.** சங்கமித்தை பிக்குணி உள்ளிட்ட பிக்குணிமார் இலங்கைக்கு வருகை தந்ததன் முக்கிய நோக்கம்
(1) இலங்கைக்கு மகாபோதி மரக்கிளையை கொண்டு வருதல்
(2) அனுலா அரசியை துறவியாக்குதல்
(3) தீவு முழுவதும் பௌத்த சமயத்தைப் பரப்புதல்
(4) மூவகை சைத்திய வழிபாட்டை பிரபலமாக்குதல்
(5) பிக்குணி சாசனத்தை இலங்கையில் தாபித்தல்

**39.** மகா விகாரைக்கு எதிராக அபயகிரி மரபினைத் தாபிப்பதற்கு முக்கிய பங்கு ஆற்றிய இருவர்
(1) வண. குப்பிகல மகாதிஸ்ஸ, வலகம்பா மன்னன்
(2) வண. கோதகத்ததிஸ்ஸ, வலகம்பா மன்னன்
(3) வண. குப்பிகல மகாதிஸ்ஸ, மகாசேன மன்னன்
(4) வண. குப்பிகல மகாதிஸ்ஸ, கீர்த்தி ஸ்ரீ மேவன் மன்னன்
(5) வண. கோதகத்ததிஸ்ஸ, மகாசேன மன்னன்

**40.** இலங்கையில் பௌத்த சமயம் அறிமுகம் செய்யப்பட்ட பின்னர் பௌத்த போதனைகளை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கைக் கோலத்தைப் பின்பற்றிய அக்கால இலங்கை மக்கள் சகவாழ்வும் பரோபகாரமும் வாழ்க்கைக்கு அத்தியாவசியமானவை எனக் கருதினார். உணவு பானங்கள், பாத்திரங்கள், உழைப்பு என்பவற்றைத் தமக்குள்ளே பகிர்ந்து கொண்டு பயன்படுத்துவதற்கு அவர்கள் பழகினர். இவ்வாறு ஒருவருக்கொருவர் உழைப்பைப் பகிர்ந்து கொள்ளுதல்
(1) இராஜகாரிய முறை
(2) பண்டமாற்று முறை
(3) அத்தம் முறை
(4) நிந்தகம் முறை
(5) அந்த முறை

**41.** பிறப்பிலிருந்து இறப்பு வரை பௌத்த கலாசாரத்துக்கமைய வாழ்க்கையை உருவாக்கிய புராதன இலங்கையர்கள் பல்வேறு நோக்கங்களை பாரம்பரிய நம்பிக்கைகளுக்கு ஏற்ப நிறைவேற்றினர். சிறு குழந்தையின் கழுத்தில் 'பஞ்சாயுதம்' அணிவித்தல் குறிப்பிட்ட எதிர்பார்ப்புடன் செய்யப்படும் பழக்கம் ஆகும். இதற்கேற்ப பஞ்சாயுதம் அணிவித்தலின் மூலம் எதிர்பார்க்கப்படுவது
(1) மும்மணிகளின் ஆசீர்வாதங்களைப் பெறுதல்
(2) தேவர்களின் ஆசீவாதங்களைப் பெறுதல்
(3) அத்தியாவசியமான பழக்கத்தை நிறைவேற்றுதல்
(4) பல்வேறு ஆபத்துகளிலிருந்தும் பாதுகாப்பைப் பெறுதல்
(5) சுபீட்சத்தை ஏற்படுத்துதல்

**42.** மகா விகாரைப் பிக்குகள் திரிபிடகத்தை நூலாக உருவாக்க முற்பட்டமைக்கான கிட்டிய காரணமாகக் கருதப்படுவது
(1) பகைவர்களின் எதிர்ப்பும் வெளிநாட்டு ஆக்கிரமிப்பும் அதிகரித்தமை
(2) அபயகிரி பிக்குகள் புத்தரின் போதனைகளைத் திருத்துவதற்குத் தயாரானமை
(3) தேரவாதத்துக்கு எதிரான தவறான கருத்துகள் பரவியமை
(4) அரசாட்சியின் உறுதியின்மை
(5) திரிபிடகம் வாய்மொழி மூலமாகத் தொடருவதில் சிரமங்கள் தோன்றியமை

[பக். 8 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

**43.** கி.பி. 11 ஆம் நூற்றாண்டில் தட்டோன் நகரை ஆக்கிரமித்த பின்னர், அங்கிருந்த திரிபிடக நூல்களையும் பௌத்த தொல்லியல் கண்டுபிடிப்புகளையும் பிக்குமாரையும் பகான் நகரத்துக்குக் கொண்டு வந்து, இலங்கையின் திரிபிடகத்துடன் ஒப்பிட்டு திரிபிடகத்தின் பிழையின்மையை உறுதிப்படுத்தி பர்மாவில் தூய தேரவாத பௌத்த சமயப் பரம்பலுக்கு முக்கிய பங்களிப்புச் செய்த மன்னன்
(1) கெயன் சித்த (2) அனவரத (3) மின் டொங் மிங்
(4) அலெவங்சித்து (5) நரபதிசித்து

**44.** உலகின் முன்மாதிரியான சங்க அமைப்பு என்று கருதப்படும் தாய் சங்க அமைப்பு தொடர்பான **பிழையான** கூற்று
(1) சங்க யாப்பானது அரசின் யாப்புக்குச் சமமாக இருப்பதால் அனைத்து அதிகாரங்களும் அரசனிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன.
(2) மகா சங்க பரிணாயக்க அல்லது சங்க ராஜா பிக்குவே சங்க ஒழுங்கமைப்பின் தலைவர் ஆவார்.
(3) முக்கிய சங்க நிர்வாக அமைப்பு நான்கு பகுதிகளைக் கொண்டிருந்தது.
(4) தர்ம வினயதர பிக்குகள் 45 பேர் கொண்ட சங்க சபையினால் நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
(5) சங்கராஜ பிக்குவினால் நியமிக்கப்பட்ட ஐந்து பேரைக் கொண்ட சங்க மந்திரி சபையினால் சங்க சமூகம் நிர்வகிக்கப்பட்டது.

**45.** ஜப்பானிய பௌத்த திருவிழா ஜப்பானிய பௌத்தர்களின் சமய பக்தியை வெளிப்படுத்துவதாகக் கருதப்படுகிறது. வருடந்தோறும் பல்வேறு பௌத்த விழாக்கள் இடம்பெறுகின்றன. புத்த பெருமானின் மூன்று ஆசீர்வாதங்களின் நிகழ்வுகளைக் குறிப்பிடும் மூன்று விழாக்கள் வருடந்தோறும் இடம்பெறுகின்றன. புத்தநிலையை அடைதலையும் புத்தரின் பரிநிர்வாணத்தையும் நினைவுபடுத்துவதற்கு நடைபெறும் விழாக்கள் இரண்டு
(1) ஜோதோ, ஹனமத்சூரி (2) ஒபோன், நெஹங் (3) ஹனமத்சூரி, ஒபோன்
(4) ஜோதோ, நெஹங் (5) ஜோதோ, ஒபோன்

**46.** சீன பௌத்த பரம்பலில் இந்திய மற்றும் மத்திய ஆசிய பிக்குமாரினால் செய்யப்பட்ட பங்களிப்பு பாரிய அளவினதாகும். சீனாவுக்கு வந்த காசியப்ப மாதங்க பிக்குவுடன் இணைந்து லோயான் இல் தவல அஸ்வாராமயவில் இருந்து பௌத்த நூல்கள் பலவற்றை சீன மொழியில் மொழிபெயர்த்த மத்திய ஆசியாவைச் சேர்ந்த பிக்கு
(1) வண. போதிதர்ம (2) வண. அஸ்வகோஷ (3) வண. சுபாலன்
(4) வண. சாந்தரக்ஷித (5) வண. தர்மாகர

**47.** சிங்கள செய்யுள் இலக்கியத்தின் பொற்காலம் எனக் குறிப்பிடப்படும் கோட்டை ராச்சிய காலத்தில் புத்தரின் குணங்கள், ஜாதகக் கதைகளைக் கருப்பொருளாகக் கொண்டு பல செய்யுள் ஆக்கங்கள் எழுதப்பட்டன. ஜாதகக் கதைகளைக் கருப்பொருளாகக் கொண்டு அவ்வாறு எழுதப்பட்ட செய்யுள் இலக்கியம்
(1) புதுகுணாலங்காரய (2) லோவட சங்கராவ (3) பரகும்பா சிரித
(4) ஹன்ச சந்தேசய (5) காவ்ய சேகரய

**48.** புனித போதி மரத்தைச் சுற்றி ஒடுங்கிய விதானத்துடன் கட்டப்படும் போதிகர இலங்கைக்கே தனித்துவமான கலை ஆக்கமாகும். இந்த போதிகரக்களில் இப்போது பெருமளவு நன்கு பாதுகாக்கப்பட்டிருக்கும் கட்டிடக் கலையம்சம் பொருந்திய போதிகர அமைந்திருக்கும் இடம்
(1) மஹா இல்லுப்பல்லம (2) பன்குலிய (3) வெஸ்ஸகிரிய
(4) நில்லக்கம (5) புளியங்குளம்

**49.** இலங்கையில் தூபி நிர்மாணிப்பில் இந்தியாவின் சாஞ்சி தூபி முன்மாதிரியாகக் கொள்ளப்பட்டபோதும் இலங்கைக்கான தனித்துவத்தை வெளிப்படுத்தும் கட்டடக்கலை அம்சங்களும் காலத்துக்குக்காலம் தூபி நிர்மாணிப்பில் சேர்க்கப்படுள்ளன. அதற்கமைய பின்வரும் தூபிப் பகுதிகளிடையே உள்ளூர் தனித்துவம் **இல்லாத** அம்சம் எது?
(1) வட்டதாகே (2) பிரதக்ஷிணாபதய (3) பேசா வலலு
(4) கொத் கருல்ல (5) சூடா மாணிக்கய

**50.** காந்தார, மதுர சிற்பக்கலை மரபானது இந்தியாவில் புத்தர் சிலைகளின் சிற்பக் கலை வளர்ச்சிக்கு பெரிதும் பங்களிப்புச் செய்துள்ளன என்பது அந்தந்த மரபுக்குரிய பண்புகளிலிருந்து உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கேற்ப பின்வருவனவற்றுள் மதுரா மரபைச் சேர்ந்த அம்சத்தைத் தெரிவுசெய்க.
(1) மகா கருணையின் வெளிப்பாடு
(2) கைகள் அடக்கமாக சரீரத்துக்கு நெருக்கமாக இருத்தல்
(3) அரைவாசி மூடிய கண்கள்
(4) தாமரை ஆசனத்தில் சிரமத்துடனான சரீரஸ்திதியை எடுத்துக்காட்டுதல்
(5) தலைமயிர் குறித்தவொரு பாணியில் சுருள் சுருளாக இருத்தல்

* * *

Department of Examinations Sri Lanka

AL/2021(2022)/45/T-II

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka
සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021(2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021(2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021(2022)

බෞද්ධ ශිෂ්ටාචාරය II
பௌத்த நாகரிகம் II
Buddhist Civilization II

**45 T II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இலிருந்து எவையேனும் **இரண்டு** வினாக்களையும் பகுதி **II** இலிருந்து எவையேனும் **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

※ ஒவ்வொரு வினாவுக்கும் **20** புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

## பகுதி I

**1.** (i) பிராமண வர்ணத்துக்குரிய கடமைகள் (சுயதர்மம்) **நான்கின்** பெயர்களைத் தருக. (02 புள்ளிகள்)

(ii) பௌத்த சிரமண மரபின் அதிவிசேடமான பண்புகள் **மூன்றைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) புத்தரின் காலத்தில் இந்தியாவில் நிலவிய மன்னர் ஆட்சிமுறை பற்றி சுருக்கக்குறிப்பு எழுதுக. (04 புள்ளிகள்)

(iv) புத்தரின் காலத்தில் இந்திய ஆட்சியாளர்களுக்கும் புத்த பெருமானுக்கும் இடையில் நிலவிய தொடர்பினை **ஐந்து** உதாரணங்களூடாக விளக்குக. (05 புள்ளிகள்)

(v) பூரண கசப்பாவின் அகிரியாவாத கோட்பாட்டைச் சுருக்கமாக அறிமுகப்படுத்தி, அதனை பௌத்த போதனைகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடுக. (06 புள்ளிகள்)

**2.** (i) புத்த பெருமான் 'சுகத' என்ற பெயரினால் அழைக்கப்பட்டதற்கான **இரண்டு** காரணங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) புத்த பெருமானின் முன்மாதிரியான தலைமைத்துவத்தை எடுத்துக்காட்டும் **மூன்று** சந்தர்ப்பங்களைச் சுருக்கமாக விளக்குக. (03 புள்ளிகள்)

(iii) புத்த பெருமானின் சமய பொறுமைப் பண்பை **நான்கு** உதாரணங்களூடாக வெளிப்படுத்துக. (04 புள்ளிகள்)

(iv) விசாகா மஹோபாசிகாவின் வாழ்க்கையிலிருந்து இல்லற வாழ்வின் வெற்றிக்குப் பெற்றுக்கொள்ளக்கூடிய **ஐந்து** முன்மாதிரிகளை எடுத்துக்காட்டுக. (05 புள்ளிகள்)

(v) நிகழ்கால சமூகப் பிரச்சினைகளை இழிவளவாக்குவதற்கு பஞ்சசீலபிரதிபதாவிலிருந்து பெற்றுக்கொள்ளத்தக்க பங்களிப்புகளை விவரிக்குக. (06 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

3\. (i) 'ஜயம் வெரம் பஸவதி' என்ற தம்மபத காதாவை சரியாகப் பூரணப்படுத்துக. (02 புள்ளிகள்)

(ii) மேலே (i) இல் குறிப்பிட்ட காதாவின் கருத்தை எழுதுக. (03 புள்ளிகள்)

(iii) சிகாலோவாத சூத்திரத்தின்படி குரு - சீடர்களின் கடமைகள் பொறுப்புகள் **பத்தையும்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) இல்லற வாழ்க்கையின் வீழ்ச்சியில் தாக்கம் செலுத்தும் காரணங்களைத் தவிர்த்துக் கொள்வதால் முன்னேற்றத்தை ஏற்படுத்திக்கொள்ள முடியும் என்பதை பராபவ சூத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள **ஐந்து** காரணிகளைக் கொண்டு விளக்குக. (05 புள்ளிகள்)

(v) வளங்களை முகாமைத்துவம் செய்தல் பற்றிய பௌத்த போதனைகள் தனிநபரின் பொருளாதார உறுதித்தன்மைக்குத் துணையாய் அமையும் விதத்தினை விவரிக்குக. (06 புள்ளிகள்)

## பகுதி II

4\. (i) பிறப்பை அடிப்படையாகக் கொண்டு மனிதர்களை உயர்ந்தவர் - தாழ்ந்தவர் என வகைப்படுத்த முடியாது என்பதை பௌத்த மூலாதாரங்களைக் கொண்டு தெளிவுபடுத்துக. (10 புள்ளிகள்)

(ii) "மக்களுக்கு நேர்மையான பாதுகாப்பையும் பொருளாதார உறுதித்தன்மையையும் வழங்குதல் அரசனின் முக்கிய கடமையாகும்." பௌத்த அரசாட்சிக் கோட்பாடுகளை ஆதாரமாகக் கொண்டு ஆராய்க. (10 புள்ளிகள்)

5\. (i) புத்தரின் காலத்தில் தர்மத்தைப் பரப்பும் சேவையை வெற்றிக்கு இட்டுச்சென்ற காரணிகளைப் பரிசீலிக்குக. (10 புள்ளிகள்)

(ii) அழகியலை நயத்தல் தனிநபரின் ஆன்மீக விருத்திக்கு எவ்வாறு பங்களிப்புச் செய்யும் என்பதை பௌத்த போதனைகளை ஆதாரமாகக் கொண்டு பரிசீலிக்குக. (10 புள்ளிகள்)

6\. (i) இரண்டாவது பௌத்த பேரவை நிகழ்வுக்கு இட்டுச்சென்ற காரணிகளை விளக்கி, அதன் விளைவுகளை ஆராய்க. (10 புள்ளிகள்)

(ii) கனிஷ்க மன்னன் பௌத்த சாசனத்துக்கு வழங்கிய சேவையைப் போதிய காரணங்களை எடுத்துக்காட்டி மதிப்பிடுக. (10 புள்ளிகள்)

7\. (i) நாலந்தா பல்கலைக்கழகத்தின் கல்வி மற்றும் நிர்வாகக் கட்டமைப்பினை விவரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) பௌத்த சமயத்துக்கு முந்திய இலங்கையில் நிலவிய வழிபாடுகள், நம்பிக்கைகள் என்பன பௌத்த சமயத்துக்கு அமைவாக உருவான முறையை எடுத்துக்காட்டுக. (10 புள்ளிகள்)

8\. (i) இலங்கையில் பௌத்த சமயம் தொடர்ந்து நிலைபெற மகாவிகாரை வழங்கிய சேவையை மதிப்பிடுக. (10 புள்ளிகள்)

(ii) "சந்திரவட்டக்கல் என்பது இலங்கை சித்திரக் கலைஞர்களின் திறனை உலகுக்கு வெளிப்படுத்தும் தனித்துவமான படைப்பாகும்." ஆராய்க. (10 புள்ளிகள்)

* * *

Department of Examinations Sri Lanka ,
Department of Examinations Sri Lanka ,